*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Vallalar's Reformist Thoughts

**Dr. P. Pushphalatha*,**
Assistant Professor (SG), Saveetha Pedagogical Institute of Education and Research, Saveetha Institute of Medical and Technical Sciences (SIMATS).
*Correspondence: lathaomsakthi@gmail.com,

**Article Info**
Received on 29-Mar-2026, Revised on 29-Mar-2026, Accepted on 30-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

Vallalar, also known as Ramalinga Adigalar, stood at the forefront of eliminating societal contradictions and fostering a new societal awakening. He strongly condemned polytheism and animal sacrifices to minor deities, asserting that the Supreme God is the light form of 'Arutperunjothi' (Supreme Grace Light). In 1865, he established the 'Samarasa Veda Sanmarga Sangam' to create a Sanmarga society. He emphasized three great principles for human life: Pasithiru (Be hungry), Thanithiru (Be solitary), and Vizhithiru (Be awake). In this article, these reformist thoughts of Vallalar are compared with the ideas of several scholars and saints, including Thiruvalluvar, Thirumoolar, Thirugnanasambandar, Thirunavukkarasar, Sundarar, Buddha, and Bharathiyar. This paper establishes how closely Vallalar's noble objectives—such as the rejection of meat-eating, eradication of the caste system, the belief in one God, and soul-centered universal brotherhood (Anmaneya Orumaippadu)—align with the thoughts of other enlightened figures.

***KEYWORDS:*** *Vallalar, Reformist thoughts, Sanmarga Sangam, Rejection of meat, Eradication of caste, Soul-centric universal brotherhood.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

# வள்ளலாரின் சீர்திருத்தச் சிந்தனைகள்

*முனைவர் ப. புஷ்பலதா, உதவிப் பேராசிரியர் (SG), துறை: சவீதா கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்(SPIER), பல்கலைக்கழகம்:சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம்(SIMATS), சென்னை. MAIL ID :LATHAOMSAKTHI@GMAIL.COM
செல் எண்: 8072253250

**ஆய்வுச்சுருக்கம் (Abstract)**

இராமலிங்க அடிகளார் என அழைக்கப்படும் வள்ளலார், சமுதாயத்தில் காணப்பட்ட முரண்பாடுகளைக் களைந்து புதிய சமுதாய மலர்ச்சியை உருவாக்குவதில் முன்னின்றார். இவர் பல தெய்வ வழிபாட்டையும், சிறு தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுப்பதையும் வன்மையாகக் கண்டித்து, முழுமுதற் கடவுள் ஒளிவடிவான அருட்பெருஞ்சோதியே என்றார். சன்மார்க்க சமுதாயத்தை உருவாக்க 1865 ஆம் ஆண்டு 'சமரச வேத சன்மார்க்க சங்கம்' என்னும் அமைப்பை நிறுவினார். மனித வாழ்விற்குப் பசித்திரு, தனித்திரு, விழித்திரு ஆகிய முப்பெரும் கொள்கைகளை வலியுறுத்தினார். வள்ளலாரின் இத்தகைய சீர்திருத்தச் சிந்தனைகள் திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், புத்தர், பாரதியார் போன்ற பல அறிஞர்களின் கருத்துக்களோடு இக்கட்டுரையில் ஒப்பிடப்பட்டுள்ளன. புலால் மறுத்தல், சாதி ஒழிப்பு, ஒருவனே தேவன் மற்றும் ஆன்மநேய ஒருமைப்பாடு ஆகிய வள்ளலாரின் உயரிய நோக்கங்கள், பிற அருளாளர்களின் சிந்தனைகளுடன் எத்துணை தூரம் ஒத்துப்போகின்றன என்பதை இக்கட்டுரை நிறுவுகிறது.

---

**திறவுச்சொற்கள் (Keywords):** வள்ளலார், சீர்திருத்தச் சிந்தனைகள், சன்மார்க்க சங்கம், புலால் மறுத்தல், சாதி ஒழிப்பு, ஆன்மநேய ஒருமைப்பாடு

---

**புதிய சமுதாய மலர்ச்சி**

வள்ளலார் என்னும் பெயரை தனக்கே தனியுரிமைக் ஆக்கிக் கொண்டவர் இராமலிங்க அடிகளார். அவர் வாழ்ந்த காலத்தில் பெருகிக் கிடந்த முரண்பாடுகள் அனைத்தையும் முற்றாக கலைந்து புதிய சமுதாய மலர்ச்சியை உருவாக்கும் முயற்சியில் முன்னின்றவர். உலக வாழ்க்கையில் உழலும் மனிதனை ஒழுக்கம் உறவுகள் என வாழ்வியலின் எல்லாக் கூறுகளிலும் செம்மைப்படுத்தினார். அத்தகு செம்மைசான்ற மனிதர்களை ஒன்று திரட்டி தான் விழைந்த சீர்திருத்த புத்துலகிற்கு உரியவர்களாக ஆக்கும் பணியையும் மேற்கொண்டார். அவ்வகையில் அவர் சமய நெறியில் வழிபாட்டுத் துறையில் பல சீர்திருத்தச் சிந்தனைகளையும் முன்னேற்றப் பாதைகளையும் வழங்கியுள்ளார். தன்னைப் பின்பற்றி வந்து வளரும் அன்பர்கள் கூட்டத்தைத் திரட்டி ஒருமுகப்படுத்துவதற்காக அவர் அமைத்த சங்கம் என்கிற நிலையும் சபை என்கிற அமைப்பும் சீர்திருத்தச் சிந்தனைகளின் தொடக்கமே எனலாம்.

வள்ளலார் சமூக சீர்திருத்த வாதியாக உருவாவதற்கு அவர் பின்பற்றிய வாழ்க்கை முறையே அடிப்படையாக அமைந்தது என்றால் மிகையில்லை.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

**"சமய அடியார்களும் அறநெறியாளர்களும் தத்துவக் கொள்கைச் சான்றோர்களும் தம் அறநூல் கருத்துக்களைப் பரப்பச் சங்கங்களைத் நிறுவித் தொண்டாற்றியுள்ளனர் என்பது வரலாறு காட்டும் உண்மையாகும். பெரியபுராணத்தில் காணலாகும் திருக்கூட்டச்சிறப்பு என்னும் இயல் ஆழ்ந்து இயைபு படுத்திச் சிந்திக்கத்தக்கது"[1]**

**(செ. வைத்தியலிங்கம், வள்ளலார் வாழ்வியல் பக்கம் - 89)**

என்னும் கருத்துரை எண்ணிப் பார்ப்பதற்குரியது.

**ஒருவனே தேவன்**

வள்ளலார் உருவமாகியும், அருவமாகியும், அருவுருவமாகியும் கடவுள் ஒருவரே உள்ளார் என்றும் இருவர், மூவர், ஐவர் என்பது உடலுக்கு உயிர் இரண்டு மூன்று ஐந்து என்பது போலாம் என்கிறார்.

**"உருவ ராகியும் அருவின ராகியும் உருஅரு வினராயும்**
**ஒருவ ரேஉளார் கடவுள்கண் டறிமினோ உலகுளீர் உணர்வின்றி**
**இருவ ராம்என்றும் மூவரே யாம்என்றும் இயலும் ஐவர்கள் என்றும்**
**எருவ ராய் உரைத் துழல்வதென் உடற்குயிர் இரண்டுமூன் றெனலாமே"2**

**(திருவருட்பா பாடல்-5384)**

என்ற பாடலில், தெய்வங்கள் பலபல என்பார் திருவருள் விளக்கம் இல்லாதவர்கள் என்கிறார் வள்ளலார். மேலும் தெய்வம் ஒன்றென்று அறியாமல் எமது தெய்வம், எமது தெய்வம் என்று பலத் தெய்வங்களை மக்கள் கூறுவதை அறவே வெறுக்கிறார்.

**முழுமுதற் கடவுள் ஒளிவடிவமானவர்**

உருவ வழிபாட்டையே அனைத்து மக்களும் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் உருவ வழிபாட்டை சித்தர்கள் விரும்பவில்லை.

**"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்தியே**
**சுற்றிவந்து முணமுணன்று சொல்லுமந்திரமேதடா**
**நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்**
**சுட்ட சட்டி சட்டுவங் கறிச் சுவைய றியுமோ" 3**

**(சித்தர்கள் கண்ட இறைமை சி.எஸ்.முருகேசன் பக்கம் -27)**

என்கிறார் திருமூலர்.

**சிறுதெய்வ வழிபாட்டை மறுத்தவர் வள்ளலார்**

வள்ளலார் சிறு தெய்வ வழிபாட்டை வன்மையாகக் கண்டித்தார். அருட்பெருஞ் சோதியே முழுமுதற் கடவுள் என்றும், பிரம்மா, விஷ்ணு, ருத்திரர்களெல்லாம் மதத் தலைவர்கள், கடவுளரல்லர், இறைவனது பேரருளை நோக்க "இம் மதத் தலைவர்கள் சிறுபிள்ளைக்

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

கூட்டமேயாவர்" என்கிறார்.

**"நான்முகர்தல் உருத்திரர்கள் நாரணர்இந் திரர்கள்**
**நவில்அருகர் புத்தர்முதல் மதத்தலைவர் எல்லாம்**
**வான்முகத்தில் தோன்றிஅருள் ஒளிசிறிதே அடைந்து**
**வானகத்தும் வையகத்தும் மனம்போன படியே**
**தேன்முகந்துண் டவர்எனவே விளையாடா நின்ற**
**சிறுபிள்ளைக் கூட்டம்என அருட்பெருஞ்சோ தியினால்**
**தான்மிகக்கண் டறிகஎனச் சாற்றியசற் குருவே**
**சபையிடைத் தரசேஎன் சாற்றும் அணிந் தருளே"4**

**(திருவருட்பா, பாடல்- 4178)**

என்பது அப்பாடல்.

வள்ளலார் வாழ்ந்த காலத்தில் காடன், மாடன், வீரன், காளி, கூளி, காட்டேரி என்னும் சிறு தெய்வங்கள் ஊர் தோறும் கோயில் கொண்டிருந்தன. அந்த தெய்வங்கள் மக்களுக்கு நோய்களைத் தருமென்ற மூட நம்பிக்கையும் நிலவி வந்தது. எனவே நோய்கள் வராமலிருக்க அத்தெய்வங்களுக்கு ஆடு, கோழிகளைப் பலியிட்டு வந்தனர். இவற்றையெல்லாம் கண்டு மனம் வருந்தினார் வள்ளலார்.

**"வள்ளலார் காலத்தில், வங்க மாநிலத் தலைநகரான கல்கத்தாவிலுள்ள காளி கோவிலில் நாள்தோறும் கணக்கற்ற உயிர்கள் பலியிடப்பட்டன. கருணை வள்ளலான இராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூடக் காளி கோயிலில் பலியிடும் வழக்கத்தைக் கண்டித்ததாகத் தகவல் இல்லை. தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுக்கும் கொடுமையை முதன்முதலாக ஒளிவு மறைவின்றிக் கண்டித்தப் பெருமை நம் வள்ளலாருக்கே உரியது"5**

**(வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு மா. பொ. சி. பக்கம்- 375)**

என்கிறார் மா.பொ.சி. அவர்கள்.

**சன்மார்க்க சங்கம்**

சன்மார்க்க சமுதாயம் காண விழைந்த வள்ளலார் அச்சமுதாயம் சங்கத்தின் மூலமே தோன்றமுடியும் என உணர்ந்து 1865 ஆம் ஆண்டு "சமரச வேத சன்மார்க்க சங்கம்" ஏற்படுத்தினார். பிற்காலத்தில் இப்பெயர் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" என மாற்றியமைக்கப்பட்டது.

சங்கம் வைத்து தமிழ்மொழி வளர்த்தனர் நமது சான்றோர். இந்தியாவில் சமயத்திற்கென சங்கம் கண்டவர் புத்தர். தமிழகத்தில் தோன்றிய சமய சமூக சீர்திருத்த அமைப்பாக வள்ளலார் சங்கத்தை ஏற்படுத்தினார்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

**மூன்று கொள்கைகள்**

**பசித்திரு** : வள்ளலார் பசித்திரு என்றதன் பொருள். "சுகித்திருக்க உண்ணாமல், உயிர் தரிக்கப் பாதி வயிறு உண்" என்பதாம். மனப்பக்குவம் பெற்றவர்களுக்கே அடிகளார் இதை கூறுகிறார். மனப்பக்குவம் பெறாத சாதகர்கள். "பசி கண்டவுடன் தடை செய்யாமல் ஆகாரம் கொடுத்தல் வேண்டும்" என்று கூறுகிறார்.

**தனித்திரு :** தனித்திரு என்பது வள்ளலார் உபதேசித்த இரண்டாவது மந்திரமாகும். தனித்திருத்தல் என்பதற்காக மலைக்கோ, வனத்திற்கோ செல்லாமல் மக்கள் மத்தியிலே வாழ்ந்து அவர்களுக்கு தொண்டாற்றி அடிக்கடி உள்ளொளி பெருக்குவதாகும். வள்ளலார் தமது உபதேசத்தில் "சிவ சிந்தனையுடன் தனித்திருந்தால் பேரின்பந் துய்க்கலாம்" என்கிறார்.

**விழித்திரு :** வள்ளலார் உபதேசித்த மூன்றாவது மந்திரம் விழித்திரு என்பதாகும். நம்மை நட்டஞ் செய்யும் நான்கனுள் தூக்கமும் ஒன்றாகக் குறிப்பிட்டார் வள்ளலார்.

உபதேசித்த பசித்திரு தனித்திரு விழித்திரு என்கிற மூன்று மந்திரங்களையும் வாழ்வில் கடைபிடிப்பவர்களுக்கு என்றென்றும் நல்வாழ்க்கை அமையும் என்பதை அறியலாம்.

**வள்ளலாரின் சீர்திருத்தச் சிந்தனைகள்**

வள்ளலாரின் சமுதாயச் சீர்திருத்த சிந்தனைகளை பிற அறிஞர்களின் கருத்துக்களோடு ஒப்பிட்டு பார்க்கப்படுகிறது. வள்ளலார் தமது அருட்பாக்களின் மூலம் வெளிப்படுத்திய சீர்திருத்த சிந்தனைகளை அவருக்கு முன்னால் ,தமிழ் உலகில் அறம் உணர்த்திய பலரும் அவரது சமகால நூற்றாண்டில் வாழ்ந்தவர்களும், அவருக்கு பிற் பட்ட காலப்பகுதியில் தோன்றியவர்களும் ஏற்றிப் போற்றி எடுத்துரைத்துள்ளனர்.

**ஒப்பீட்டில் இடம் பெறுபவர்கள்**

அருட்பாவை வழங்கிய வள்ளலாரின் சீர்திருத்த சிந்தனைகளை திருவள்ளுவர் ,திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ,சுந்தரர் ,மாணிக்கவாசகர் ,தாயுமானவர், புத்தர், மகாவீரர் ,காந்தியடிகள், பாரதியார் ,சிவானந்தர் முதலான சிந்தனையாளர்களின் கருத்துக்களோடு ஒப்பிட்டு பார்க்கலாம் .

இவர்களில் திருவள்ளுவர் துவங்கி தாயுமானவர் வரையிலான எழுவரும் வள்ளலாருக்கு காலத்தால் முற்பட்டவர்கள்.

**வள்ளுவரும் வள்ளலாரும்**

திருவள்ளுவர் கிறுஸ்து பிறப்பதற்கு முப்பத்தியொரு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவர் எனக் கணக்கிட்டு அவ்வகையில் தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்திற்கு பிறகு எழுந்த தொன்மை வாய்ந்த நூலாக திருக்குறள் திகழ்கிறது. அந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

மூன்று தலைப்புகளில் அறக்கருத்துக்களை வழங்குவது. தமிழர் வேதமாகவும், வேதத்திற்கு இணையான கருத்துப் பெட்டகமாகவும், ஒரு வகையில் வேதத்தை விட மேம்பட்டதாகவும் விளங்குவது.

வள்ளலார் திருக்குறள், திருவாசகம், திருமந்திரம் என்ற மூன்று நூல்களையும் போற்றிக் கொண்டாடியவர். திருக்குறளை வாழ்க்கை வழிகாட்டியாகக் கொண்டு அந்நூலைப் பற்றி தொடர் வகுப்புகள் நடத்தியவர் வள்ளலார் தமது அருட்பாவில் பல இடங்களில் வள்ளுவச் சிந்தனைகளை பதிவு செய்திருக்கிறார். நிலையா உலகில் நிலைத்த தன்மையை அடைவதற்கு திருக்குறளும், திருவருட்பாவும் வழிகாட்டக் கூடியன.

திருவருட்பாவின் மூன்றாம் திருமுறையில் நெஞ்சறிவுறுத்தல் என்னும் பகுதி அமைந்துள்ளது. அப்பகுதியில் பல்வேறு திருகுறட்பாக்களை அப்படியே எடுத்தாண்டு அது குறள் மொழி என்பதையும் வள்ளலார் சுட்டிக் காட்டுகிறார்.

**"கூத்தாட்டு அவைசேர் குழாம் விளிந்தாற் போலும்**
**சீர்த்தாட் குறள்மொழியும் தேர்ந்திலையே"[6]**
**(திருவருட்பா நெஞ்சறிவுறுத்தல் - 433,434,435)**

என்னும் பகுதி ஒரு குறட்பாவின் முதல் வரியை எடுத்துக்காட்டி அது குறள்மொழி என்பதையும் வெளிப்படுத்தி நிற்கிறது. இங்கு வள்ளலார் மேற்கோள் காட்டியிருப்பது.

**"கூத்தாட் டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந் தற்று" [7]**
**(திருக்குறள் -332)**

என்னும் நிலையாமை அதிகார குறட்பாவே ஆகும்.

இளமை, செல்வம், யாக்கை என்னும் மூன்றும் நிலையற்றது என்பது முடிந்த முடிவு. இம்மூன்றில் ஒன்றான செல்வம் நிலையாமையைக் கூறும் போது வள்ளலார் வள்ளுவர் வழியில் சிந்தித்திருக்கிறார். இது பற்றிக் குறிப்பிடும் போது, வள்ளலார் எடுத்தாளும் "கூத்தாட்டவைக் குழாற்றே" என்னும் குறட்பா செல்வ நிலையாமையைக் கூறுவது. கூத்தாட்டவை கூத்தாகும். அவை : நாடக சபை நாடக அரங்கம், இந்நாளில் திரை அரங்கம், நாடக அரங்கில் நாடகங்காண மக்கள் சிறிது சிறிதாக வந்து கூடுவர். மாலையிலிருந்தே சிலர் சிலராக வந்து கூடுவர். நாடகம் முடிந்தவுடன் எல்லோரும் ஒரே சமயத்திற் கலைந்து செல்வர்.

**புலால் மறுத்தல்**

பொதுமக்களிடையே புலால் உண்ணும் பழக்கம் மிகுந்து காணப்படுகிறது. முதல் முதல் புலால் உணவை கண்டித்து குரல் கொடுத்தவர் வள்ளுவர். இதற்காகவே அவர் புலால் மறுத்தல் என்னும் ஒரு அதிகாரத்தையே ஏற்படுத்தியுள்ளார்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

**"படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்**
**உடல்சுவை உண்டார் மனம்"[8]**
**(திருக்குறள் -253)**

என்பது குறள். பிற உயிரின் ஊனை உண்டு சுவைகண்டவர் நல்லவற்றை நினைக்கமாட்டார் என்கிறார் வள்ளுவர்.

வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தில் புலால் உண்போர்க்கு இடமில்லை. புலால் மறுத்தலை ஒரு கொள்கையாகச் செய்தார் வள்ளலார். ஆறாம் திருமுறையில் அருள் விளக்க மாலையில் புலால் மறுத்தலைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

**"உயிர்க்கொலையும் புலைப்பொசிப்பு உடையவர்கள் எல்லாம்**
**உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார்" [9]**
**(திருவருட்பா பாடல்- 4160 )**

இவ்வாறு வள்ளலாரும் ,வள்ளுவரும் பல கருத்துக்களில் ஒற்றுமையுடன் காணப்படுகிறார்கள்.

**திருமூலரும் வள்ளலாரும்**

திருமூலர் திருவள்ளுவருக்குக் காலத்தாற் பிற்பட்டவர். திருஞானசம்பந்தருக்கு முற்பட்டவர். திருமூலர் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என கணக்கிடப்பட்டுள்ளது. திருமூலரின் திருமந்திரம் மூவாயிரம் மந்திரங்களைக் கொண்டது. நூலின் பகுதிகளுக்குப் பெயர் தந்திரம். சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் பத்தாம் திருமுறையாக திகழ்வது. திருமந்திரத்தில் மிகஎளிதாகப் பொருளுணரக் கூடிய பாடல்களும் உண்டு. பரிபாடையால் அமைந்த மிகக்கடினமானப் பாடல்களும் உண்டு.

வள்ளலாரின் வழிகாட்டி நூல்களில் ஒன்று திருமந்திரம். வள்ளலார் உபதேசத்தில், சன்மார்க்கத்தின் உண்மை தெரியவேண்டுமானால் திருமந்திரத்தைக் கவனித்தால் விளங்கும் என்கிறார். வள்ளலார் தமது அருட்பாவில் பல இடங்களில் திருமந்திரத்தை பின்பற்றி இருக்கிறார். சன்மார்க்க நெறியை அடைய திருமந்திரமும், திருவருட்பாவும் முதன்மையான நூல்களாகும்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்றவர் திருமூலர். தொல்காப்பியக் காலத்திலேயே சாதிகள் இருந்திருக்கின்றன. தொல்காப்பியம் பொருளதிகாரம் கற்பியல் மூன்றாம் சூத்திரம் சாதியைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**"மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்**
**கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே" [10]**
**(தொல்காப்பியம் - பொருளதிகாரம் -கற்பியல் -3)**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

என்று தொல்காப்பியரும்,

**"திருமந்திரத்தில் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினையின் நமனில்லை நாணாமே"** [11]

**(திருமந்திரம் -பாடல் 2104)**

என்ற மந்திரம் சாதிகள் தேவையற்றது என்பதையும் கடவுள் ஒருவரே என்பதையும் தெள்ளத்தெளிவாக விளக்கி நிற்கிறது.

திருமூலருக்கு பின் வள்ளலார் இந்தக் கொள்கையை வற்புறுத்துகிறார். இவர் கடவுள் ஒருவரே அவரை உண்மை அன்பால் வழிபடவேண்டும் என்கிறார்.

**"தெய்வங்கள் பலபல சிந்தைசெய் வாரும்**
**சேர்கதி பலபல செப்புகின் றாரும்**
**பொய் வந்த கலைபல புகன்றிடுவாரும்"** [12]

**(திருமந்திரம் -பாடல் 4176)**

என்ற அருட்பா, திருமந்திரத்தின் கருத்தோடு இணைந்துள்ளது.

உடம்பின் நிலையாமையைப் பற்றி பல ஞானிகளும், அறிஞர்களும், சித்தர்களும் எடுத்துரைத்துள்ளனர். காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா என்னும் கருத்துடைய பாடல்கள் பல உள்ளன. வள்ளலாரும் திருமூலரும் உடம்பை நன்கு பேண வேண்டும் என்கின்றனர் திருமூலர்,

**"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்தேனே"** [13]

**(திருமந்திரம் -பாடல் 724)**

என்கிறார் திருமூலர். வள்ளலார் தமது உபதேசத்தில் இதே கருத்தை வலியுறுத்துகிறார்.

**திருஞானசம்பந்தரும் வள்ளலாரும்**

சைவ சமய குரவர் நால்வரில் முதலாவதாக திகழ்பவர் திருஞானசம்பந்தர். ஞானசம்பந்தரின் பாடல்களின் தொகுப்பு முதல் மூன்று திருமுறைகள் ஆகும். நூலின் பெயர் தேவாரம். வள்ளலார் தமது வழிபடுகுருவாக ஞானசம்பந்தரையும், வழிபடுநூலாக திருவாசகத்தையும், வழிபடு கடவுளாக முருகப் பெருமானையும் ஏற்படுத்திக் கொண்டார். வள்ளலாரின் இளமைக்கால இவ்வமைப்பு முறை அவரை நன்கு பண்படுத்திற்று.

வள்ளலார் இளமையில் ஏற்படுத்திய இவ்வமைப்பை திரு.வி.க. அவர்கள் தமது "இராமலிங்க சுவாமிகள் திருவள்ளம்" என்ற நூலில் பாராட்டி குறிப்பிட்டுள்ளார்.

**"சகோதரிகளே! சகோதரர்களே! இராமலிங்க சுவாமிகள் திருஞானசம்பந்தப் பெருமானைக் குருவாகக் கொண்டு, திருவாசகத்தைப் பொருணூலாகக் கொண்டு, முருகப் பெருமானை வழிபடு கடவுளாகக் கொண்டு, கடவுள் அருளுருவங்கண்டு,**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

**காம வெருளி மயக்கங்களைப் போக்கி, யாண்டுங் கடவுள் நீக்கமற நிறைத்திருத்தலை உணர்ந்து, எவ்வுயிர்க்குந்தீங்கு செய்யாமை என்னும் அருளறத்தை வளர்த்து, அவ் அருள்நெறியே சமரசு சன்மார்க்க மென்று தெளிந்து, அம்மார்க்கத்தை உலகுக்கு அறியுறுத்தி இறுதியில் சாகாநிலையெனும் பெருவாழ்வு பெற்றார். அவ்வாழ்வே நமது குறிக்கோள், அதை நிறைவேற்றச் சுவாமிகள் கொண்ட முறைகளைக் கொள்ள வேண்டுவது நமது கடமை"[14]**

**(இராமலிங்க சுவாமிகள் திரு உள்ளம் திரு.வி.க. பக்கம் -141)**

திருஞானசம்பந்தரின் தேவாரத்தைப் பொன்மொழி என்று போற்றும் வள்ளலார் அப்பொன்மொழியை மற்றை மொழிபோல் மறந்துவிட்டாயே என்று தம் நெஞ்சுக்கு எடுத்துரைக்கிறார்.

**"இறையோன்**
**புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை மாயா**
**மலமொன்றி அந்தோ மறந்தாய் - நிலனொன்றி"[15]**

**(சம்மந்தரும் வள்ளலாரும்- ஊரன் அடிகள்- பக்கம் -108)**

மேற்கூறிய பாடல் அருட்பாவில் நெஞ்சறிவுறுத்தல் பகுதியில் 470 வது கண்ணியாகும். இதனுள் "இறையோன்" என்றது சம்பந்தரை "புலனைந்தும் என்றருளும் பொன்மொழியை" என்றது புலனைந்தும் பொறிகலங்கி என்று தொடங்கும் சம்பந்தரின் திருவையாற்றுத் தேவாரத்தையேயாகும்"

**சாதி ஒழிப்பு**

சமுதாயத்தில் சாதி வேற்றுமை மலிந்திருந்த அக்காலத்தில், சம்பந்தர் தமது யாத்திரையில் பக்க வாத்தியமாக யாழ் வாசிப்பதற்குத் திருநீலகண்ட யாழ்பாணர் என்னும் அரிசன அடியவரைக் கொண்டிருந்தார். ஒரு சமயம் திருஞான சம்பந்தர் திருக்கூட்டத்தோடு யாத்திரையாகச் சாத்த மங்கை என்ற ஊருக்கு சென்று அங்கு திருநீலநக்கர் என்னும் அந்தணர் வீட்டில் யாகத்தில் கலந்து கொள்கிறார். நாள் தோறும் ஓமம் செய்யும் வைதிக அந்தணர் திருநீலநக்கரின் மனையில் யாகசாலை ஓமக் குண்டமேடை அருகே அரிசன தம்பதிகளான திருநீலகண்ட யாழ்பாணரும், மதங்கசூளாமணியாரும் படுப்பதற்கு இடங்கொடுக்க வைக்கிறார் ஞானசம்பந்தர், சேக்கிழார் பெரிய புராணத்தில் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறார்.

**"நின்ற அன்பரை நீலகண்டப் பெரும் பாணர்க் (கு)**
**இன்று தங்கஓர் இடங்கொடுத்தருளுவீர் -என்ன**
**நன்றும் இன்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்**
**சென்று மற்றவர்க் கிடங்கொடுத்தனர்திரு மறையோர்" 16**

**(சேக்கிழார் -பெரியபுராணம்)**

வள்ளலார் 'சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே" என்கிறார். வள்ளலாரின் சன்மார்க்க சங்கத்தில் அனைத்து சாதியினரும் இடம் பெற்றிருந்தனர். வடலூரில் தருமச் சாலையில் சமபந்தி போசனமே நிகழ்கிறது. பெரியோர்கள் உண்மைக்கு, ஒழுக்கத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்தனர் என்பது ஞானசம்பந்தர், வள்ளலார் வரலாறுகள் மக்களுக்கு காட்டுகின்றன.

**திருநாவுக்கரசரும் வள்ளலாரும்:**

திருநாவுக்கரசர் தேவார மூவரில் ஒருவர், திருமுனைப்பாடிநாட்டில் திருவாமூர் என்ற ஊரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் மருள் நீக்கியார். நாவுக்கரசரின் தமக்கையார் திலகவதியார். நாவுக்கரசர் பாடிய பாடல்களின் தொகுப்பு தேவாரம் எனப்படும். நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் இவர் பாடியனவாகும். இவர் தாண்டகம் பாடுவதில் வல்லவர் எனவே இவர் தாண்டகவேந்தர் என போற்றப்பட்டார்.

வள்ளலார் அப்பரையும் அவரது தேவாரத்தையும் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். வள்ளலாரின் சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளுக்கு முன்னோடியாக விளங்கியவர் அப்பர். இவரது குறிக்கோளாக இருப்பது "என் கடன் பணி செய்து கிடப்பதே" ஆகும்.

**சுந்தரரும் வள்ளலாரும்**

சுந்தரர் சைவ சமயகுரவர் நால்வரில் சுந்தரர் மூன்றாம் இடத்தைப் பெறுகிறார். இவர் பாடிய பாடல்களின் தொகுப்பு தேவாரம் ஆகும். சுந்தரர் தேவாரம் ஏழாம் திருமுறையாக தொகுக்கப்பட்டுள்ளது. சிவடினயார் அறுபத்து மூன்று நாயன்மார்களின் பெயர்களை எல்லாம் முதன்முதலில் தொகுத்து ஒரு பட்டியலாக்கித் 'திருத்தொண்டத் தொகை' என்று ஒரு பதிகத்தைப் பாடி வெளிப்படுத்தியவர் சுந்தரர். திருநாவலூரில் அந்தணக் குடியில் பிறந்து அரச குலத்தில் வளர்ந்தவர் சுந்தரர்.

வள்ளலார் சைவ சமயக் குரவர் நால்வரிடத்திலும் வள்ளலார் மிகப் பெரிதும் ஈடுபாடு கொண்டவர், நால்வரைப் போற்றி நான்கு அருண்மாலைகளைப் பாடியுள்ளார். சுந்தரரையும் அவரது தேவாரத்தையும் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளதோடு, சுந்தரரின் அருள் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்களை எண்ணி எண்ணி அவற்றில் பெரிதும் ஈடுபட்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

சுந்தரர் மலை நாட்டுத் தலங்களை வழிபடவும் சேரமான் பெருமாளைக் காணவும் தல யாத்திரை மேற்கொள்கிறார். கொங்கு நாட்டில் திருப்புக்கொளியூர் என்னும் தலத்தைச் சென்றடைந்தார். அந்தணர் வீதியின் வழியாகக் கோயிலுக்கு செல்லும் போது அவ்வீதியில் ஒரு வீட்டில் மங்கல ஒலி கேட்டது. நேர் எதிர் வீட்டில் அழுகை ஒலி கேட்டது. வேறுபட்ட இக்காட்சியைக் கண்ட சுந்தரர் அங்கேயே நின்றுவிட்டார். அருகிலிருந்தவர்களைக் கேட்டார். மங்கல ஒலி கேட்கும் வீட்டில் சிறுவனுக்குப் பூணூல் கல்யாணம் நிகழ்கிறது மங்கல வாத்தியங்கள் வாசிக்கிறார்கள். எதிர் வீட்டில் இரண்டாண்டுகளுக்கு முன்பு இறந்து போன சிறுவனை நினைத்து அழுகிறார்கள் என்றனர்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

ஒரே தெருவில் எதிரெதிர் வீடுகளில் ஒன்றில் மங்கல ஒலி, மன்றொன்றில் அழுகை ஒலி. இந்த வீட்டில் சிறுவனும், அந்த வீட்டுச் சிறுவனும் இருவருமாகச் சேர்ந்து குளிக்கப் போனார்கள். ஐந்து வயதுச் சிறுவர்கள். ஊர் புறயிருந்த மடுவில் நீந்திக் குளித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவனை முதலை விழுங்கிவிட்டது. தப்பிப் பிழைத்துக் கொண்டவனுக்கு இப்போது பூணூல் கல்யாணம். எதிர்வீட்டில் இறந்து போன தங்கள் மகனின் நினைவு வருகிறது. அதனால் அங்கு அழுகை ஒலி சுந்தரர் குளக்கரையை அடைந்து இறைவனைக் குறித்து பாடல் பாடினார். ஏழு வயது சிறுவனாக முதலை வாயில் இருந்து இறந்த சிறுவனை மீட்டுக் கொடுத்தார்.

**"உரைப்பார் உரைஉகந்து உள்கவல்லார்தங்கள் உச்சியாய்**
**அரைக்காடு அரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்**
**புரைக்காடு சோலைப் புக்கொளி யூர்அவிநாசிய**
**கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே"** [17]

**(தேவாரம் -பாடல் -8171)**

சிறிது நேரத்திற்கு முன் அழுகை ஒலி கேட்ட வீட்டில் மங்கல ஒலி முழங்கச் செய்தார்.

**புத்தரும் வள்ளலாரும்**

புத்தர் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு வட இந்தியாவில் கபிலவஸ்து என்ற நகரில் அரசக் குடும்பத்தில் பிறந்தார். புத்தரின் பிறப்பை "தனக்கென வாழா பிறர்க்குரியாளன்" என்று மணிமேகலை கூறுகின்றது. அவ்வாறு அரசக் குடும்பத்தில் பிறந்தாலும் 'ஆசையே துன்பத்திற்கு காரணம்' என்று அறிந்து அரச வாழ்வை துறந்து பௌத்த சமயத்தை ஏற்படுத்தினார் புத்தர்.

வள்ளலார் முதன் முதல் ஆன்மீகத்திற்கெனச் சங்கம் கண்டவர் புத்தர். தமிழ்நாட்டில் முதன் முதலில் ஆன்மீகத்திற்குச் சங்கம் கண்டவர் வள்ளலார். முழுமையாக பௌத்த சமய கொள்கைகளை பரப்ப எழுதப்பட்ட நூல் மணிமேகலை அந்நூல் முழுவதிலும் அன்னதானத்தின் சிறப்பு விவரிக்கப்பட்டுள்ளது. வள்ளலாரும் அன்னதானத்தை பெரும் பணியாகக் கொண்டார். அருகரையும், புத்தரையும் தமது பாடல்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

**சாதி ஒழிப்பு**

பாரதியார், வள்ளலார் இருவருமே சாதி, ஒழிப்பிற்கு பாடுபட்டவர்கள். மக்களைப் பிரிக்கும் பிரிவினைகளில் முக்கியமான இடம் சாதி பிரிவினைக்கு உண்டு.

வள்ளலார் தம் பாடல்களிலும், உபதேசங்களிலும் சாதிக் கொடுமையைக் குறிப்பிடுகிறார்.

"தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு, சாதியேற்பாடு முதலிய கட்டுப்பாடு ஆசாரங்கள். அவையாவன: ஜாதியாசாரம், குலாசாரம், முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேல்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து சுத்த சிவ சன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்குப் பொது நோக்கம் வந்தால் மேல்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளைப் பெறலாம்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.35*

தமது அருட்பெருஞ்சோதி அகவலிலும் சாதியைக் குறிப்பிடுகிறார்.

**"சாதியும் மதமும் சமயமும் காணா**

**ஆதி அநாதியாம் அருட்பெருஞ்சோதி* 18 (திருவருட்பா -பாடல்- 4615)**

வள்ளலார் சாதி, மதம், சமயம் என்னும் மாயையில் கட்டுண்டு வாழ்க்கையை அழித்துக் கொள்ளாமல், அருட்பெரும் சோதியாய் மக்கள் ஒன்று கூட வேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறார் .

**தொகுப்புரை**

வள்ளலாரும் பிற அருளாளர்களும் கொண்டிருந்த சிந்தனைத் தொடர்பு "உயர்ந்த மனிதர்கள் ஒன்றையே சிந்திக்கிறார்கள்" என்னும் பழமொழியை மெய்ப்பிப்பதாக அமைகிறது. அவ்வகையில் இக்கட்டுரையில் திருவள்ளுவர், திருமூலர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகம், தாயுமானவர், மகாவீரர், புத்தர், காந்தியடிகள், பாரதியார், சிவானந்தர் எனப் பலரும் சமய சமுதாயச் சிந்தனைகளில் வள்ளலாருடன் ஒன்றி நிற்கும் திறப்பாடு இக்கட்டுரையில் மெய்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் வள்ளலாரின் கொள்கைகளான புலால் மறுத்தல், ஒன்றே குலம், பல தெய்வ மறுப்பு, புலால் மறுப்பு, அன்னதானச் சிறப்பு, சிறுதெய்வ வழிபாட்டு எதிர்ப்பு, சாதிச் சழக்குகளை அழித்தல், சமுதாய அவலங்களைப் போக்குதல் ஒலி வழிபாடு, ஐம்புல அடக்கம், உணவு முறை, ஆன்மநேய ஒருமைப்பாடு என்னும் உதாரணங்களுடன் நிலை அனைத்திலும் வள்ளலாரின் கருத்துக்களோடு ஒத்துப் போகின்றனர். இவ்வுலகில் மக்கள் அனைவரும் இன்ப வாழ்வை அடைய வேண்டும் என்றால் வள்ளலார் காட்டிய சமுதாய சீர்திருத்தக் கருத்துகளை நம் நெஞ்சில் நிலைபெறச் செய்து வாழ்வை செவ்வனே அமைத்துக் கொள்ளவேண்டும். வள்ளலாரின் கருத்துக்கள் எக்காலத்திலும் மனித வாழ்விற்கு உறுதுணை புரியும் என்பதில் ஐயமில்லை.

**பார்வை நூல்கள் (References)**

[1]. ஊரன் அடிகள். *சம்மந்தரும் வள்ளலாரும்*. பக்கம் 108.

[2]. கல்யாணசுந்தரனார், திரு. வி. *இராமலிங்க சுவாமிகள் திரு உள்ளம்*. பக்கம் 141.

[3]. சேக்கிழார். *பெரியபுராணம்*.

[4]. சுந்தரர். *தேவாரம்*.

[5]. திருமூலர். *திருமந்திரம்*.

[6]. திருவள்ளுவர். *திருக்குறள்*.

[7]. தொல்காப்பியர். *தொல்காப்பியம்*.

[8]. பொன்னுசாமி, மா. (மா.பொ.சி.). *வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு*. பக்கம் 375.

[9]. முருகேசன், சி. எஸ். *சித்தர்கள் கண்ட இறைமை*. பக்கம் 27.

[10]. ராமலிங்க அடிகளார். *திருவருட்பா*.

[11]. வைத்தியலிங்கம், செ. *வள்ளலார் வாழ்வியல்*. பக்கம் 89.